விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 20 ஷவ்வா 25 இதழ் 143

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-7-1986

மட்டக்களப்பில்

## வன்முறைச் சம்பவங்களில் 400 குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு, வியா. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினராலும் மற்றும் வன்செயல்களாலும் இதுவரை எடுக்கப்பட்ட கணக்கின் படி சுமார் 400 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாக மட்டக்களப்புஅரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தெரிவித்துள்ளார்.

அயுதப்படையினராலும், தமிழ், முஸ்லிம் கலவரத்தாலும் 4251 வீடுகள் எரிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் உள்ளதோடு ஈச்சிலம்பத்தையில் ஊர்காவல் படையினரால் இருபத்தியொரு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுமுள்ளனர் என்றும் திருகோணமலையிலிருந்து 449 குடும்பங்களைச் சேர்ந்த 1895பேர் அகதிகளாக மட்டக்களப்புக்கு வந்துள்ளனரென்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுவருவதாகவும், தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியுடனும், அரச அதிபரின் முயற்சியாலும்

(5ம் பக்கம் பார்க்க)

● பூண்டுலோயா பொலிஸ்நிலையம் முற்றுகை:

# 500 தோட்டத் தொழிலாளர் கைதான 12 பேரை மீட்டனர்

## 35 வீடு 28 கடைகள் தீக்கிரை

(ஹற்றனிலிருந்து நமது நிருபர்)

**தாக்குதல் சம்பவம் தொடர்பாக பூண்டுலோயா பொலிசாரினால் கைது செய்யப்பட்ட 12 மலையக தமிழ் இளைஞர்களை உடன் விடுதலை செய்யுமாறு சுமார் ஐநூறு தோட்டத் தொழிலாளர்கள் தடிகள், கற்களுடன் பொலிஸ் நிலையம் முன்பாகச் சென்று செய்த ஆர்ப்பாட்டத்தையடுத்து அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள 35 குடிமனைகளும் 28 கடைகளும் முற்றுகத் தீவைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டன.**

பூண்டுலோயா தேயிலைத் தோட்டத்தில் நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம் பெற்றது. இத்தோட்டம் தலவாக்கொல்லையிலிருந்து 10 மைல் தூரத்தில் உள்ளது.

பூண்டுலோயா தோட்டத்தில் வேலைசெய்யும் மலையகத் தமிழ் இளைஞர்கள் மூன்று பேர் நகரில் படம் பார்த்துவிட்டு தமதுஇருப்பிடம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர் என்றும் இவர்களைத் தடுத்து நிறுத்திய சில சிங்கள இளைஞர்கள் விசாரித்துவிட்டு பலமாகத் தாக்கி விரட்டினுர்கள் என்றும் தாக்குதலுக்குள்ளான மூன்று இளைஞர்களும் தமது தோட்டத்துக்கு சன்றுவிட்டு மீண்டும்அவ்விடத்துக்கு வந்து கடைகளுக்குள் மறைந்திருந்த சிங்களவர்களைத் தாக்கினுர்கள் என்றும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்ட பூண்டுலோயா பொலிசார் 12 மலையகத தமிழ் இளைஞர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர். இவர்களை உடனே விடுதலை செய்யுமாறு கோரி சுமார் 500 தோட்டத் தொழிலாளர்கள் தடிகள் கற்கள் சகிதம் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

(5ம் பக்கம் பார்க்க)

### ஈழத்தமிழரின் கோரிக்கைக்கு ஆதரவு

சென்னை, ஜுலை 3

சென்னையில் நடைபெறும் தமிழ் ஈழத்திற்கான ஆசிய மாணவர்கள் ஒருமைப்பாட்டு மாநாடு இன்றுடன் முடிவடை கிறது.

பதினெட்டு நாடுகளிலிருந்து 80 மாணவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கிறுர்கள்.

இலங்கைத் தமிழரின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பது என்று இக் கூட்டத்தின் போது அனைவராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (பி)

சிங்களத்தில் சான்றிதழ்கள்

### விளையாட்டு வீரர்கள் பெற்றுக்கொள்ள மறுப்பு

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சினுல் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு வழங்குவதற்காக கொழும்பிலிருந்து விளையாட்டுத்துறை அமைச்சினுல் அனுப்பப்பட்டிருந்த சான்றிதழ்களை வெற்றி பெற்றவர்கள் பெற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இச் சான்றிதழ்கள் யாவும் தனிச் சிங்களத்தில் அச்சிடப்பட்டிருந்தமையாலே வெற்றி பெற்றவர்கள் இந்த மறுப்பை தெரிவித்தனர். (து)

வடமராட்சி தனியார் பேருந்து இயக்குநர் சங்கம்

ம. ம. வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**பாதை**

**இலக்கம் 750**

மேற்படி சங்கத்தின் 750–ம் இலக்க பாதையில் சேவை செய்வதற்கு இன்று (1-7-86) முதல் மினி பேருந்து வாகனங்கள் பதிவு செய்யப்படமாட்டாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

1-7-86. நன்றி.

நிர்வாகக்குழு.

[C-3268]

“வடக்கு, கிழக்கில்

### வாழ்ந்த சிங்களவர்களை மீண்டும் குடியமர்த்துவேன்” ‘காமினி’ உறுதிமொழி

(கொழும்பு)

“வடக்கிலும் கிழக்கிலும் 1981ம் ஆண்டு வரை வாழ்ந்து வந்த சிங்களவர்கள் மீண்டும் அங்கு குடியமர்த்தப்படுவார்கள்” என காணி, மகாவலி அமைச்சர் திரு, காமினி திஸநாயக்கா மகாநாயகதேரோக்களிடம் உறுதியளித்துள்ளார்-

நேற்றுமுன்தினம் அஸ்கிரிய. மல்வத்தை மகாநாயகதேரோக்களுடன் நடாத்திய சந்திப்பின்போது, சங் பாலிபனே ஸ்ரீ சந்தானந்த மகாநாயகதேரோ கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே

(5ம் பக்கம் பார்க்க)

### தரையிறங்கிய ‘ஹெலி’

யாழ்ப்பாணம் வெள்ளி

கேரதீவு- சங்குப்பிட்டிப் பகுதியில் நேற்று நண்பகல் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்த ஒரு ஹெலிகொப்டர், சற்று நேரத்தில் பற்றைக்குள் த்ரையில் இறங்கியது.

பின்னர் சிறிது நேரத்தில் மீண்டும் அவ்விடத்தை விட்டு மேலெழுந்து முகாம் நோக்கிச் சென்றது.

இச்சமயம் அப்பகுதியிலுள்ள வீதியால் சில வாகனங்களும் நடமாடியதாகத் தெரிய வருகிறது. (மா)

வல்வை

### பிரஜைகள் குழு ராஜினமா

வல்வெட்டிததுறை, வியாழன்

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி, உட்பட ஏனைய உறுப்பினர்களும் தமது பதவிகளிலிருந்து ராஜினமா செய்துள்ளனர்

நேறறு மாலையில் வல்வை சன சமூக சேவா நிலையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், வல்வைப் பிரஜைகள் குழு உறுப்பினர்கள் யாவரும் ராஜினமா செய்வதாக தெரிவிக்கப்பட்டது.

### ஐவர் பலி ஒருவர் கைது

கொழும்பு வியாழன்

மாதகல் கடற்பிராந்தியத்தில் படகில் வந்த தீவிரவாதிகளில் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

### ராணுவ தாக்குதலை எதிர்த்து மாணவர்கள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாணவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொலைசெய்யப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்று மாணவ, மாணவிகளின் ஊர்வலம் ஒன்று யாழ். கல்வித் திணைக்களத்திற்குச் சென்று மகஜர் ஒன்றினைக் கையளித்தது.

யாழ். இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் பாடசாலைகளையும், வேறு சில பாடசாலைகளையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் மௌனமாக இந்த ஊர்வலத்தில் பங்குபற்றினுர்கள். இந்த ஊர்வலம் நகர வீதி வழியாக நல்லூரிலுள்ள யாழ் கல்வித் திணைக்களத்தைச்சென்றடைந்தது.

அங்கு மாணவர்களின் பிரதிநிதிகளும், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றினுர்கள். கல்வித் திணைக்களக் கல்விப் பணிப்பாளர் அவ்வமயம் அங்கில்லாததினுல் மகஜரைக் காரியாலய உதவியாளர் திரு கே. இராஜசிங்கத்திடம் சமர்ப்பித்தனர். [ஐ]

இனப்பிரச்னை:

### இந்திய மத்திய அரசுடன் த.வி.கூட்டணி ஆலோசிக்கும்

சென்னை, ஜுலை 3

இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசு முன்வைத்துள்ள ஆலோசனைகளையும், விளக்கங்களையும், நன்கு ஆராய்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற் குழு [பொலிட்பீரோ] இவ்விடயம் குறித்து மேலதிக விளக்கங்களையும் சில ஐயப்பாடுகளையும் நிவர்த்தி செய்யும் பொருட்டு இநதிய மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுவின் கூட்டம் இன்று சென்னையில் நடை

(5ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மட்டுவில் தெற்கில் மின்சார வசதிகளுடன் 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. குபேந்திரன், மே/பா வே. தம்பித்துரை, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (C 3201]

புத்தம் புதிய சிசில் குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: சிற்றி ஷொப், 18/2 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [C 3254)

மருதனுயடம் சந்தியிலிருந்து சுமார் 200 யார் தூரத்தில், ஆச்சிரமத்திற்கு அருகாமையில் 10 பரப்புத் தோட்டக்காணி, கிணற்றுடன் விற்பனைக்குண்டு தொடர்பு: த. சண்முகநாதன், ''கைரிய வில்லா'' ,மல்லாகம். [C3251

எம்மிடம் N.V. 380 நஷனல் இன வீடியோ டெக் [புதியது] விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்: பண்டிதர் S K. சிறீகாந்தலிங்கம் 22, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். [C3260]

HONDA C90 82 சிறி Re-condition ரூ. 7500/-, சிங்கர் கால்மெசின ரூ. 1,250/-, சயிக்கிள் Gents ரூ. 1000/-. 3-6 மணிவரை ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [C 3266)

வீட்டுத்தளபாடங்கள், அல்மாரி, Nursery தளபாடங்கள், Akai Stereo றேடியோ, Baby cot, Formica சாப்பாட்டு மேசை, Verandah Chairs, Book Shelf, எழுதுமேசை, சியெஸ்டா மெத்தைகள், Water Filter, கிளாஸ்வகைகள் மற்றும் பல உடன்விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். [மாவடிச் சந்தி] [C3262]

## தேவை

வானொலி, ரீ. வி. டெக் திருத்துவதில் அனுவபமுள்ளவர்கள் தேவை. நிலோஸ் றைக்கோடிங் பார், நெல்லண்டை, பருத்தித்துறை. [C 3211]

நல்லநிலையிலுள்ள டீப் பிறிச் உடன்தேவை. தொடர்பு கொள்க; புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. [C3255]

பெண்கள் - சிறுவர்களுக்கான உடைகளை வெட்டித் தைப்பதிலும், தையல் வேலைகளிலும் அனுபமுள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும் கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [C 3202]

## வாடகைக்கு

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கருகாமையில் காங்கேசன்துறை வீதியில் ஒருகடையும் வீடும் வாடகைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும். [விலையாகவும் பெற்றுக்கொள்ளலாம்] கு வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். [C 3257]

## காணவில்லை

வவனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி வயது 9 என்பவர் 12-6-86 முதல் 99/7, பிறவுண் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து காணுமல் போய்விட்டார். இவரைக்கண்டால் தயவு செய்து வன்னியசிங்கம் 99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு உடன் தொடர்பு கொள்ளவும். (C 3234]

பொமினேரியன் வெள்ளை நாய் 2-7-86 காலை 6 00 மணியளவில் யாழ் மானிப்பாய் வீதியில் காணுமல் போய்விட்டது. இதைக் கண்டவர்கள் தயவு செய்து T. சோமசுந்தரம், (சட்டத்தரணி) ''தமிழகம்'' 93/1, மானிப்பாய் வீதி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும் (C3253

## வகுப்புகள்

SPECIAL ENGLISH-விசேட ஆங்கில வகுப்பு உயர் கல்வி மாணவர்கட்குரியது. மொழியின் சகல அம்சங்களும் கொண்ட கற்கை நெறி ஆறுமத துரித, விரிவான போதனை. வாரம் மூன்று வகுப்புகள். புதன், சனி, ஞாயிறு பி. ப 3 30 — 5-30 ஆசிரியர்: த. ந பஞ்சாட்சரம், இடம்: Ganas Academy, Nallur. தினம் பி. ப 3-30 மணிக்கு கல்வி நிலையத்தில் தொடர்புகொள்க:- நிர்வாகி. [C-3256]

Electronic Engineering (B Sc - 1st year Level, English Medium விண்ணப்ப முடிவுத்திகதி 05-07-86 தொடர்பு: Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக் கருகாமையி ]. 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3199]

Radio and T. V. (Antenna, Deck) வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம். English Typing புதிய பிரிவுகள் 05-07-86 இல் ஆரம்பமகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall, 328. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C 3200)

Quantity Surveying [காலம்: 3 மாதம்] வகுப்பு ஆரம்பம்: 7 7-86 1-30 p m. விபரங்கட்கு: JAFFNA TECHNICAL INSTITUTE, 52/1, Stanley Road, Jaffna (C3239)

தபால்மூலம் லண்டன் பரீட்சைக்களுக்கான Book-keeping and Accounts யாவர்க்கும் உகந்த வகையில் Spoken English அடங்கிய ஆங்கிலப் பாடமும் போதிக்கப்படும். நேரிலும் இப்பாடங்களுடன் தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து வகுப்புகள் வார, வார இறுதி நாட்களில் நடைபெறுகின்றன. இம்பீரியல் இன்ஸ்ரிரியூட்ஸ், மெயின் வீதி. இளவாலை. (C3160)

## WANTED

Civil Engineer- To work on Desilting of Ponds for 8 years. Successful candidate will have an opportunity of working for a Post Graduate degree Apply before 12-7-86 with C.V. Salary negotiable Secretary, Ootru Organisation Mari Amman Lane, Thirunelvely, Jaffna. [C 3245]

## சேவை

புதுப்பிக்கப்பட்ட ஹொண்டா C70, C90 ஓடர்களுக்கு எடுத்துக்கொடுக்கப்படும். J.P.T Ltd, 3, நவீன சந்தை [மேல்மாடி] யாழ்ப்பாணம். [A900]

மின் விசிறி, மின் அடுப்பு. ரான்ஸ்போமர், மோட்டர் கிறைண்டர், வாசிங்மெஷின், ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன உத்தாவாதத்துடன் திருத்த, றீவைண்டிங் செய்ய ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், (பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும்) (C- 3217)

## தவறிவிட்டது

திருமதி கெலன் வெரோணிக்கா றெபேட் யேசுதாசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 26-6 86 யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பத்தமேனி, அச்சுவேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [C-3241]

### மூன்றுவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி
சிந்துமதி

பொலிகண்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராஜேந்திரன்- இராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சிந்துமதி தனது மூன்றுவது பிறந்தநாளை இன்று (4-7-86) தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிருர். இவரை வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமன்மார், ஜேர்மன் பெரியப்பா, கனடா மாமா, பாலு மாமா, மகேந்திரம் மாமா, செல்லக்கிளி சித்தப்பா, அன்ரிமார், அத்தைமார் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிருர்கள். [C-3244]

### தவறிவிட்டது

இல. 503372975V காங்கேசு ஞானஸ்கந்தன், யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டை பச்சைநிற பிளாஸ்ரிக் உறையுடன் பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கா. ஞானஸ்கந்தன், சென்றல் கிளினிக் (சாமி அன் கோ), 192, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2.025. [C-3246]

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வல்லிபுரம்
இரத்தினசிங்கம்
(சிங்கம்) (கம்பர்மலை)

ஆண்டவன் படைப்பு: 28- 7- 1948
அநியாய அழிப்பு; 6- 6- 86

6- 6- 86-ல் சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு இரத்தினசிங்கத்தின் சபிண்டீகரண கிரியைகள் 5- 07- 86 சனிக்கிழமை அன்னரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் ஆத்மசாந்திக்காக உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து பிரார்த்திக்குமாறு வேண்டுகின்ருேம்.

மனைவி, மக்கள்,
தாய், தந்தையர்,
சகோதர,
சகோதரிகள்,
மைத்துனர்.

பாரதி வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(C 3265)

### மின் தடை

இலங்கை
மின்சார சபையின்

### முக்கியஅறிவித்தல்

1986-07-06ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்ஞகத்திலிருந்து யாழ்ப்பாணத்துற்கு வரும் 33 K. V. மின் பாதையில் அவசர திருத்த வேலைகள் செய்ய இருப்பதனுல் காலை 8.00 மணி முதல் மாலை 4 00 மணி வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின் நிலையங்களுக்கும்; கோண்டாவில்; கொக்குவில்; கோப்பாய்; திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத்தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்ருேம்.

இம் மின்தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது;

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்ஞகம்.
[A 904]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### பிரயாண ஒழுங்கு

✶ கனடா ✶ டென்மார்க் ★ பிரான்ஸ்
✶ மே. ஜேர்மனி, ✶ நெதர்லாண்ட்
✶ அவுஸ்திரேலியா.

எமது அனுபவம் வாய்ந்த முகவர்கள் கீழ் காணும் திகதிகளில் உங்களை கூட்டிச் செல்லவுள்ளனர். 15/7, 20/7, 30/7/86.

ஈராக் HOSPITAL CLEANERS, சவூதிஅரேபியா, LABOURERS, அவுஸ்திரேலியா பயண ஒழுங்குடன், பாஸ்போட், BOND, ரிக்கட், விசா, எல்லாம் செய்து தரப்படும்.

ரஜீவன் ட்ரவல்ஸ்,
42, மணிககூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
PHONE: 23665 B. M .C. OPPOSIT. [C 3238]

### பிரயாண ஒழுங்குகள்

✶ கனடா ✶ ஜெர்மனி
✶ பிரான்ஸ் ✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

டென்மார்க்—கனடா

ஆகிய நாடுகளுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]

# சர்வதேச சமாதான விதிமுறைகளை

# அமெரிக்கா மீறிவருகிறது!

## ஐ. நா. சோவியத் தூதுவர் கண்டனம்

நியுயோர்க், ஜூலை 3

சர்வதேச சமாதானத்துக்கான விதிமுறைகளை அமெரிக்கா மீறி வருவதாக சோவியத் யூனியன் கண்டனம் தெரிவித்துள்ளது.

நிக்கரகுவா அரசின் மீதான அமெரிக்காவின் அச்சுறுத்தல்கள் சம்பந்தமாக ஐ. நா. பந்தோபஸ்து சபையில் ஆராயப்பட்டது. அப்பொழுது அங்கு உரையாற்றும் பொழுதே ஐ நா. வுக்கான சோவியத் தூதுவர் இந்தக் கண்டனத்தை தெரிவித்தார்.

மத்திய அமெரிக்காவில் அமைதியை தோற்றுவிக்கும் 'கொன்ரடாரோ' குழுவின் முயற்சிகளுக்கு அமெரிக்காவின் இந்தச்செயல் மாறானது என்றும் சோவியத் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா வழங்கவுள்ள பத்துக் கோடி டாலர் உதவி சம்பந்தமான புகார் ஒன்றினை நிக்கரகுவா அரசு பந்தோபஸ்து சபையிடம் கையளித்துள்ளது

இது சம்பந்தமாக சபையில் எழுந்த விவாதத்தின் போது மேலும்பல நாடுகள் சோவியத் யூனியனின் கருத்துக்களையே ஆதரித்ததாக தெரிவிக்கப்பட்டது [ரா]

உலகச் செய்திகள்

## வளைகுடா யுத்தம் மீண்டும் உக்கிரம்

தெஹ்ரான், ஜூலை-3

ஈரான்-ஈராக் நாடுகளுக்கிடையிலான யுத்தம் குறுகிய கால சமாதான நிலைமைகளுக்குப்பின் மீண்டும் உக்கிரமடைந்துள்ளது.

ஈரான்-ஈராக் எல்லைப் பகுதியில் உக்கிரமடைந்துள்ள இச்சண்டைகளின்போது ஈராக்கினால் முன்பு கைப்பற்றப்பட்ட பல நகரங்களைத் தாம் மீட்டுள்ளதாக ஈரான் அறி த்துள்ளது. மீட்கப்பட்டவற்றில் மெட்ரான் நகரம் பிரதானமானதாகும் இந் நகரை இரண்டு மாதங்களுக்கு முன்பதாக ஈராக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த எல்லைப்புற மோதல்களின்போது ஈராக்கியப்படையினர் பலர் கொல்லப்பட்டதாகவும், பலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் ஈரான் அறிவித்துள்ளது. [ரா]

## இந்தியா - லிபியா கூட்டு அபிவிருத்தி

புதுடில்லி, ஜூலை-3

இந்தியாவும், லிபியாவும் தொழில், வர்த்தகத் துறையில் மேலும் ஒத்துழைக்கவுள்ளன

இந்திய, லிபிய கூட்டுக் கமிஷன் கூட்டம் நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் அணி சேரா அமைப்பின் அடிப்படையில் தமது இந்த பொருளாதார ஒத்துழைப்பினை நல்லமுறையில் அபிவிருத்தி செய்யமுடியுமென்றும் இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது. [ரா]

அவசரகாலநிலை அமுலின்போது—

## தென்னாபிரிக்காவில் 780 பேர் கைது; வழக்குத் தொடரப்படும்

பிறிட்டோரியா, ஜூலை 3

தென்னாபிரிக்காவில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தியதின் பின்பு இதுவரை மொத்தமாக 780 சறுப்பினத்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கடந்த மாதத்தில் இந்த அவசரகால நிலைமை அமுலுக்கு கொண்டு வரப்பட்டது தெரிந்தே.

கைதுசெய்யப்பட்டுள்ளவர் மீது கொலை, தீவைப்பு ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இவர்கள் மீகான வழக்குவெகு விரைவில் நீதிமன்றத் தில் தாக்கல் செய்யப்படும் என்று பிறிட்டோரியா அரசு அறிவித்துள்ளது. [ரா]

## பஞ்சாப்பில் 6 பேர் கொலை

சண்டிகார், ஜூலை 3

பஞ்சாப்பில் நேற்று முன்தினம் ஆறுபேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

பிரோஸ்பூர் மாவட்டத்திலுள்ள ஒருபொலிஸ் நிலையத்துக்கருகிலேயே இக்கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன காக்கிச் சட்டையுடன் ஜீப்பில் வந்த கிளர்ச்சியாளர்களே இக் கொலைகளை நடத்தியதாக கூறப்பட்டது. [ரா]

## "அபிவிருத்தி கிராமத்திலிருந்தே ஆரம்பமாக வேண்டும்"

நெல்லியடி, வியாழன்

"அபிவிருத்தி வேலைகள் கிராமத்திலிருந்து ஆரம்பிக்கப்படுவது அவசியமாகும் அப்பொழுதுதான் அபிவிருத்தியின் பயன்கள் பரவலாகும். இந்த வகையில் வதிரி அபிருத்தி நிறுவனத்தின் அபிவிருத்தி வேலைகள் வதிரிக் கிராமத்தோடு நிற்காது அயற் கிராமங்களிற்கும் பரவலாக்கப்படவேண்டும்", என்று வைத்திய கலாநிதி எம். கே முருகானந்தம் வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நிறுவனத்தின் நான்காவது ஆண்டு நிறைவுவிழா வதிரி வடக்கு மெதடிஷ் மிஷன் பாடசாலை மண்டபத்தில் அபிவிருத்தி நிறுவனத்தின் நிறுவகரும் தலைவருமான திரு. மூ. சி. சீனித்தம்பி தலைமையில் நடைபெற்றது. விழாவின் தரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட சர்வோதய வெளிக்களப்பணிப் பானர் திரு கே. சதிரயலையும் வைத்திய கலாநிதி. எம். கே. முருகானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக மிருக வைத்திய கலாநிதி. எம். தங்கராசா, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு நிர்வாக அலுவலர் திரு. எம். தம்பிப்பிள்ளை, தேவரையாளி இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. சி. திரவியம் பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் அலுவலர் திரு கே. வி. திவ்வியராசா அரச கருமமொழித் திணைக்கள அத்தியகட்சர் திரு வி. சிவராசசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாதர் சங்க பொதுக் கூட்டம்

வேலணை, வியா.

வேலணை கிழக்குமாதர் அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் மாதர் சங்கத் தலைவி திருமதிபத்மாவதி திருஞானம் தலைமையில் வேலணை சரஸ்வதிவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகவேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் கலந்துகொண்டார். அன்றையதினம் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

புதிய யோசனைகள்:

# சிலஷரத்துக்கள்முழுமையாக ஏற்க முடியாதவை!

கொழும்பு, வியாழன்

இனப்பிரச்னை தீர்வு குறித்து இலங்கை அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளின் சில ஷரத்துக்கள் முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியத நிலையிலுள்ளன என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை காங்கிரஸின் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் சந்தித்தார். சுமார் 90 நிமிட நேரம் இடம்பெற்ற அச் சந்திப்பின்போதே இது தெரிவிக்கப்பட்டது.

### குமார் அறிவிப்பு

இப்புதிய யோசனையின் ஏனைய அம்சங்களும் அவ்வளவாக திருப்தி அளிக்கவில்லை என்றும் தமிழ் காங்கிரஸ் கூறியுள்ளது. [ரா]

## சுன்னாகம் சிவனுக்கு சித்திரத்தேர்

சுன்னாகம், வியாழன்

சுன்னாகம் ஸ்ரீகதிரமலைச் சிவன் கோவிலுக்குச் சித்திரத் தேர் கட்டப்படவுள்ளது.

இதற்கான கேள்விகளை ஆலயத்திருப்பணிச்சபை கோரியுள்ளது.

தேர்த்திருப்பணியை விரைந்து முடிப்பதற்கான முயற்சியில் சபை ஈடுபட்டுள்ளது.

## அகதிகளுக்கு மருந்துகள், ஆடைகள்

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர்க்கிளை அன்னையர் முன்னணி கிளிநொச்சியில் அண்மையில் நடந்த வன்செயல்களால் பாதிப்படைந்த அகதிகளுக்கு ஆடைகள், மருந்துகள், பால்மா உணவுகள் ஆகியவற்றையும், தேவையான மருந்துகள் வாங்கவென ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறையும் பொது மக்களிடம் சேர்த்துத் தமிழ்ச் சங்கங்கள் மற்றும் அன்பர்கள் மூலம் சேகரித்து கையளித்து அத்துடன் குருநகரில் அகால மரணமடைந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணமாக ரூபாய் ஆயிரத்தையும் டாக்டர் பிலிப் மூலம் வழங்கியது.

## மாணவர்கள் கல்வியில் ஊக்கம்காட்ட பொருட்காட்சி அவசியம்

யாழ்ப்பாணம், வியா.

'பயங்கரமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் மாணவர் சமுதாயம் கல்வியில் அக்கறைகொள்வதற்கு இப்படியான பொருட்காட்சிகளை பள்ளிக்கூடங்களில் நடத்துவது மிகவும் அவசியமானதாகும்' என்று யாழ்திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கில பாடசாலையில் இடம்பெற்ற பொருட்காட்சி ஆரம்ப நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சிவானந்தன் தெரிவித்தார்.

மாணவர்களின் சொந்த முயற்சியினால் ஆக்கப்பட்ட பலவகையான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவைகளை ஒவ்வொரு பாடத்திற்கும் பொறுப்பான வட்டாரக் கல்வி அதிகாரிகள் வந்து பார்வையிட்டு பாராட்டிச்சென்றனர்.

பாடங்களுக்கேற்ப பிரிவு பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்த இக்கல்விப் பொருட்காட்சி சிறப்பாக அமைந்திருந்தது.

## "உயிரினங்களுக்கு ஊறுசெய்வதை இறைவன் விரும்புவதில்லை"

நெல்லியடி வியா.

"இறைவனால் படைக்கப்பட்ட சகல உயிரினங்களுக்கும் வாழும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ் உரிமையை மறுத்து ஊறுசெய்வதை இறைவன் விரும்புவதில்லை"

இவ்வாறு மறைந்த தோலகட்டி அருட்சகோதரர் வண. இம்மானுவேல் வென்செஸ்லாஸ் அடிகளின் மறைவுக்கு அனுதாபம்தெரிவிக்குமுகமாக பருத்தித்துறைபுனித அந்தோனியார்ஆலயத்தில் ஆரம்பமாகிகரவெட்டிபுனிதஅந்தோனியார் ஆலயத்தில் முடிவுற்ற சிலுவை சுமக்கும் பிரார்த்தனை ஊர்வல முடிவில் திருப்பலிப்பூசை கொடுத்த பருத்தித்துறைப் பங்குத் தந்தை வண. பொனிவேஸ் அடிகளார் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கத்தோலிக்க-இந்து மக்கள் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் பருத்தித்துறையில் ஆரம்பித்து மந்திகை, மாரிசந்தை, வதிரிச்சந்தி, நெல்லியடி ஆகிய பகுதிகள் ஊடாகச் சென்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தை மாலை 6மணியளவில் அடைந்தது.

இவ்வூர்வலத்தின் மத்தியில் ஒரு கத்தோலிக்க குரு பாரிய சிலுவை ஒன்றை சுமந்து சென்ற காட்சி உள்ளங்களை உருக்குவதாகவிருந்தது. ஊர்வலம் சென்ற பகுதிகளில் கடைகள் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததும், தனியார் வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### மணிவாக்கு

''அமைதிப் புரட்சியை சாத்தியமில்லாத தாக்கிவிடுபவர்கள், வன்முறை புரட்சியைத் தவிர்க்கமுடியாத தாக்கிவிடுகிறார்கள்.''

ஜோன் எப் கென்னடி.

# நமது நோக்கு

## சூழ்நிலை உருவாகட்டும்!

ஜனாதிபதி திரு. ஜே. ஆர்: ஜயவர்த்தன இனப்பிரச்னை தீர்வுக்கென வெளியிட்டுள்ள யோசனைகள் அடங்கிய பத்திரங்களை காணி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்க சியாம் மகா நிக்காயவைச் சேர்ந்த மல்லவத்த அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களிடம் கடந்த திங்கட்கிழமை கையளித்துள்ளார். இந்த யோசனைகள் பற்றிய மகாநாயக்கர்களின் கருத்துக்களை அறியும் பொருட்டு இம்மாதம் 15ம் திகதிக்கு முன் அவர்களை ஜனாதிபதி சந்திக்கவிருக்கின்றார் என்ற தகவலையும் அமைச்சர் அப்போது தெரிவித்துள்ளார்.

அமைச்சருடனான இந்தச் சந்திப்பின்போது மகாநாயக்கர்களில் ஒருவர் கருத்து வெளியிடுகையில் தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் அதே வேளை சிங்களவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சகல பாதுகாப்புக்களும் எடுக்கப்படவேண்டும் என்றும் மனித இனத்தில் மிக சொற்ப விகிதத்தினரையே கொண்டுள்ள சிங்கள மக்களைப் பாதுகாப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பௌத்த மதத்தைப் பாதுகாப்பது பற்றியும், மத்திய அரசு பிரதான நிர்வாக அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடம் வைத்துக்கொண்டிருப்பது பற்றியும் கூட வலியுறுத்தியுள்ளார்.

மகாதேரர்களின் இந்த நிலைப்பாடு புதிதான ஒன்றல்ல. சிங்கள மக்களையும், சிங்களத் தலைவர்களையும் அவர்களே வழிநடத்துகிறார்கள். பௌத்தபீடத் தலைவர்களின் ஆதரவும், அங்கீகாரமுமின்றி அவர்கள் ஆட்சியில் அமர்வது இலேசானகாரியமல்ல. பௌத்த பீடங்களைப் பகைத்துக் கொள்பவர்கள் பதவியில் நெடுங்காலம் நீடிப்பதும் இல்லை. எனவே அவர்களின் ஆதரவையும் ஆசியையும் எவ்வாறாயினும் பெற்றுக் கொள்வதன் மூலமே சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த முடியும் என்றநிலை அரசியலாருக்குண்டு.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சிங்கள மக்களின் எந்த ஒரு உரிமையையும் பறிக்கும் படியோ, அவர்களுக்குள்ள சுதந்திரங்களை அகற்றும்படியோ கூறவில்லை. அது அவர்கள் மரபுமல்ல.

தமிழ்மக்கள் தாம்வாழும் பிரதேசங்களில் 'இது எமது நாடு' என்ற உரிமையுடன் ''நம்மை நாமே ஆளுகின்றோம்'' என்ற உணர்வுடன் வாழவிரும்புகிறார்கள்.

எந்த ஒரு மக்கள் கூட்டத்துக்கும் உரியமிகச்சாதாரண இயற்கையான உணர்வுகளே இவை.

இதற்காகவே பல காலமாகவும் தமிழ்மக்கள் போராடி வருகின்றார்கள். அந்தப்போராட்டத்தின் ஒரு சிக்கலான கட்டம் இன்று உருவாகியுள்ளது. இந்தச்சிக்கலை அவிழ்த்து ஒரு சுமுகநிலையை ஏற்படுத்த முனைவதாக அரசு காட்டுகின்றது. அதிலும் கூட பெரும்பான்மை சமூகத்தவர்கள்முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துவதாயின் நாட்டைச்சூழ்ந்துள்ள இருள் தொடர்ந்தும் நீடிக்கவே செய்யும்.

அரசு முன்வைத்துள்ள மாகாணசபைகள் யோசனைகள் தமிழ்மக்களின் தேவைகளை அல்லது அபிலாஷைகளை எந்தவகையிலும் பூர்த்திசெய்யக் கூடியவையாக இல்லை என்ற கருத்து உருவாகியுள்ளபோதிலும் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கான ஒரு அடிப்படையாக இவை அமையமுடியும் என்று பலரால் கருதப்படுகின்றது. குறிப்பாக இந்திய அதிகாரிகள் இவ்வாறே கருத்து வெளியிடுகிறார்கள்.

அவ்வாறாயின் அதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டும் அல்லவா? ஏற்கனவே தமிழ்நாட்டில் தமிழ்ப்போராளிகளைச் சந்தித்துவிட்டுத் திரும்பியுள்ள சிறிலங்கா மக்கள் கட்சி செயலாளர் திரு. குமாரணதுங்கா சில யோசனைகளை முன்வைத்துள்ளார். தமிழ் குழுக்களுடன் ஆலோசனை நடத்தும் இந்திய அரசு அதிகாரிகளும் வேறுபல யோசனைகளை இலங்கை அரசுக்கு அறிவிக்கக்கூடும்.

இப்போதைய முயற்சிகள் வெற்றிபெறுவதானால் சகல தரப்பினரும் தமது அழுங்குப்பிடிகளை சற்றுத் தளர்த்தியே ஆகவேண்டும்.

## யாழ். இந்து கல்விக் கண்காட்சி—
## சிறுவர் இலக்கியத்துக்கு
# சிறப்புப் பிரிவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். இந்துக் கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறும் கல்விக் கண்காட்சியில் வளர்ந்துவரும் சிறுவர் இலக்கியம் என்ற மகுடத்தின் கீழ் அமைந்துள்ள சிறுவர் இலக்கியப் படைப்புகள் பகுதி சிறப்பம்சமாக இடம் பெறுகின்றது.

பிரபல சிறுவர் இலக்கிய கர்த்தா கவிஞர் பா சத்தியசீலன் ஆக்கிய சிறுவர் இலக்கிய நூல்களும், அந்நூல்களினை அடியொற்றி மாணவர் படைத்த சிருஷ்டிகளும் இடம் பெறுகின்றன.

உதயகுமாரும் தலைமுறைக்கான உன்னத பணியாகிய சிறுவர் இலக்கியத்துடன் தம்மைப் பரிச்சயம் செய்து கொள்ள விழைவோருக்கும் சிறுவர் இலக்கிய நூல்களைப் பெற விரும்புவோருக்கும் இக் கண்காட்சி ஒருநல்ல சந்தர்ப்பமாக அமையும்.

(ஷ)

# அமெரிக்க விடுதலைநங்கைக்கு இன்று நூறு வயது

வே. இ. பாக்கியநாதன்

''மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான்; ஆனால் அவன் எங்கும் சங்கிலியால் பிணைக்கப் பட்டுள்ளான்'' என்று பிரெஞ்சு நாட்டுத்தத்துவவியலாளர் ரூசோ அவர்கள் மனிதசுதந்திரம் பற்றிக்கூறிய கூற்று காலம் கடந்தாலும் இன்று உண்மைபோல் விளங்குகிறது. பிரெஞ்சு நாட்டுப் புரட்சிக்கு இக்கூற்று கூற்றுவனாய் அமைந்தது சரித்திர வரலாறு.

எனினும் குடியேற்ற நாடு ஒன்றினை எதிர்த்துப்போராடிச் சுதந்திரம்பெற்ற பெருமைருநாடுகளில் ஐக்கியஅமெரிக்கா நாட்டினையே சாரும். ''அமெரிக்கா உலகுக்குவிளக்கேற்றியுள்ளது; வருங்கால கோடிக் கணக்கானவர்களுக்கு அது வழிகாட்டுமென்றும்அது உலகெங்கணும் விடுதலை அறிவு ஒளிகளைப் பரப்புமெனவும்'' ஜோன் ஆடம்ஸ் என்ற அமெரிக்கர் கூறிய வார்த்தைகள் ஐக்கிய அமெரிக்கநாடுகள் பிரித்தானிய ஆட்சியாளரிடமிருந்து 1776 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதை உலகுக்குக் காட்டி நிற்கிறது. இப்போரைவெல்வதற்கு பிரெஞ்சுநாடு அமெரிக்காவிற்குப் பெரிதும் உதவியது. இதன் காரணமாக ஏற்பட்ட தோழமையின் பிரதிபலிப்பாக உலகுக்கு ஒளியூட்டும் விடுதலைச் சிலையைப் பிரெஞ்நாடு அமெரிக்கவுக்கு அன்பளிப்புச்செய்தது. இதைத் தான் பாரிசிலிருந்து வந்த விடுதலை நங்கை என அழைக்கின்றனர்.



### சிற்பியும் சிருஷ்டியும்

இச்சுதந்திரச் சிலையை ஐக்கிய அமெரிக்க நாட்டுக்கு வழங்கவேண்டும் என்ற பெருவிருப்பை பிரெஞ்சு வரலாற்றறிஞர் எட்வர்ட் டி லபுலாய் 1855 ஆம் ஆண்டு தெரிவித்தார். இதனைநிறைவு பெறச் செய்த பெருமை பிரெஞ்சு தேசத் தலைசிறந்தசிற்பி பார்தோல்டி (1834 - 1904 Barth-aldi) அவர்களைச்சாரும். இதனை அவர் உருவாக்குவதற்குத் தமது வாழ்நாளில் இருபது ஆண்டுகளைச் செலவழித்தார். 225 தொன்நிறையும், 15 மீ சுற்றளவும் 151அடி உயரமும் கொண்ட இச் சிலை துண்டு துண்டுகளாகச் செய்யப்பட்டு 210 பெரிய பெட்டிகளில் அடைத்து பிரெஞ்சுக் கப்பலில் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டது. இச்சிலையைத் தாங்கி நிற்கும் சம்பங்களை பாரிசில் ஈஃபல் (Effel) கோபுரத்தை நிர்மாணித்தஈஃபல்அவர்களே உருவாக்கினர், இச் சிலை இப்பொழுது விடுதலைத்தீவு என அழைக்கப்படும் பெட்டோத் தீவில் நியூயோக் துறைமுக வாயில் 1886 ஆம் ஆண்டு அப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த கிளீய்லன்ட் என்பவரினால் திறந்து வைக்கப்பட்டது. நியூயோக் துறைமுகத்தினுள் நுழையும் சகல கப்பல்களையும் வரவேற்றுக் கொண்டிருக்கிறது இச்சிலை.

இச்சிலையினது தற்போதைய உயரம் 302 அடியாகும். இதன் உச்சியைச் சென்றடைய வளைவான படிக்கட்டுக்கள் உள்ளன. இதனைவிட இதனது முடிவரை செல்வதற்கு 'லிப்ற்' ஒன்றும் உண்டு. இப்பெண்ணின் உயர்த்திய வலது கையில் 'டோர்ச' ஒன்றைக் காணலாம். 13,000 உவாட் உள்ள 19 விளக்குகளின் உதவியுடன் 600 கண்ணாடித் தகடுகளின் வழியே பல மைல்களுக்கப்பால் தெரியக் கூடிய ஒளியை வீசுகிறது இது இதனது இடதுகையின் பலகைத்தட்டு அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தைத் தாங்கியுள்ளது. இச்சிலையின் அன்பளிப்புக்குப் பதிலாக அமெரிக்கா பிரெஞ்சு நாட்டுக்கு 9 மீட்டர் உயரமுடைய சுதந்திர நங்கையை அன்பளிப்புச் செய்துள்ளது. இது ஈஃபல் கோபுரத்துக்கு அருகாமையிலுள்ள பிராகோப் பாலத்துக்குப் பக்கத்தில் இருந்து துறைமுகத்தினுள் நுழையும் கப்பல்களை வரவேற்கின்றது.

### கோலாகல விழா

சரித்திரப் பிரசித்தி பெற்ற இச்சிலையின் நூறாவது ஆண்டு விழா பெருவிழாவாக இவ் வருடம் ஆடிமாதம் 4ந் திகதியான இன்று கொண்டாடப்படுகின்றது. செல்வம் கொழிக்கும் சீமை அமெரிக்காதான் என்பதைப் பறைசாற்றும் பாணியில் இவ்விழாவின் அமைப்பு நிகழ்ச்சிகள் தென்படுகின்றன. 1776 ஆம் ஆண்டு ஜோன் ஆடம்ஸ் என்பவர் அமெரிக்க சுதந்திரக் கொண்டாட்டம் நாடு பரவலாக ஒளி, மணியோசை, வெடிகள் மூலம் கொண்டாடப்பட வேண்டும் என விரும்பினார். ஆனால் இன்று நடக்கும் விழாவோ இவரின் விருப்புக்கு மேலானதாக அமைந்துள்ளதைக் காணலாம்,

இந்நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குவதற்கென்றே அமெரிக்காவிலேயே இத்தகைய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து பெரு வெற்றியீட்டிய ஹொலிவூட் அமைப்பாளரான டேவிட் வொல்பர் என்பவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இவர் நடந்து முடிந்த உலக ஒலிம்பிக் நிகழ்ச்சிகளை

(5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## அவசியம்தானா?

கொக்குவில் பகுதியிலுள்ள வீதிகள் பல சீர்கெட்டுள்ளன. தார் வீதிகள் குன்றும் குழியுமாகி நாளுக்கு நாள் மழையை எதிர்பார்த்திருக்கும் குளங்கள்போல அகன்று வருகின்றன. இந்த நிலையில் கொக்குவில் ஆடியபாதம் வீதிக்கு [ஸ்டேசன் வீதி] பெயர்மாற்றம் செய்யும் முயற்சியொன்று இடம் பெற்றுவருகின்றது. இந்தவீதியின் நிலைமை கவலைக்கிடமாகவும் இவ் வீதிப்பகுதியின் பல இடங்களில் சட்டவிரோத மின்பாவனை போன்ற நடவடிக்கைகளும் இடம்பெற்று வரும்போது இப்பெயர் மாற்றமும் அவசியம்தானா? என்ற கேள்வியெழுகின்றது. அத்துடன் இந்த வீதிப்பகுதிக்கோ அல்லது இப்பகுதியை உள்ளடக்கிய பெரும்பான்மைப் பிரதேசத்துக்கு முக்கியமற்ற ஒருவரின் பெயரே ஆடியபாதம்வீதி என்ற பெயருக்குப்பதிலாக சூட்டப்படவுள்ளதென்றும் அறியப்படுகின்றது. எனவே இந்த நடவடிக்கையில் சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக அதைக் கைவிட்டு முதலில் வீதிச்சீர் திருத்தத்தில் கவனஞ் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நா. பாலசுப்பிரமணியம்,
கோவில்வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# இன்று ஞானக்கொழுந்து வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலில் இன்று ''ஞானக் கொழுந்து நூலின் வெளியீட்டுவிழா சிவந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையில் நடைபெறுகின்றது.

நாளை ஸ்ரீ சித்திவிநாயகரின் தேரோட்டத் திருவிழா மாலை 4மணியளவில் நடைபெறும். [ஷ]

## வைரவனே சரணம்

ராகம்:- ஷண்முகப்பிரியா தாளம்:- ஆதி

பல்லவி

கல்வயல் பதியதனில் வில்வை மரநிழலில்
நல்லருளைப் பொழியும் வைரவரே சரணம்!
— [கல்வ......]

அனுபல்லவி

கரம்தனில் திரிசூலம் கண்களிலே கருணை
பதங்களிலே தணடை கிண்கிணி சிலம்பார்க்க
— [கல்வ......]

சரணம்

ஊரவர் கூடியே உன்புகழ் பாடினோம்!
உன்புகழ் பாடியே உன்பதம் சூடினோம்!!
உன்பதம் சூடியே உன்னருள் நாடினோம்!
உன்னருள் கூடுமோ? எம்துயர் தீருமோ?
— [கல்வ......]

''முருகு''

[சாவகச்சேரி - கல்வயல் - நேரணி வில்வத்து வைரவர் பெருமான் ஆலயத்தில் இன்று வருடாந்தப் பொங்கல் விழா நடைபெறுகிறது.]

## அமெரிக்க விடுதலை நங்கைக்கு-

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வெகு கச்சிதாமாக நடாத்தி முடித்தவர் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இந்த விழாவைக்காண 6 தொடக்கம் 10 கோடி பார்வையாளர்கள் வருவார்களெனஎதிர்பார்க்கப்படுகிறது. 4000 பத்திரிகையாளர்கள் இந் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவுள்ளனர். 22 உயர்ந்த கப்பல்களுடன், 90.000 படகுகள் நியூயோர்க் துறைமுகத்தினுள் அடக்கப்படவேண்டும். 1000 நடனக் கலைஞர்களும், 1000 வாத்தியக்காரர்களும் இந் நிகழ்ச்சிகளில் 50,000 பேரை உள்ளடக்கிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ளனர். 40.000 பட்டி வெடிகள் இக்கேளிக்கை நிகழ்ச்சியில் வெடிப்பதற்காகத் தயார் செய்யப்பட்டுள்ளன. ஹொலிவூட் நடிகரும் பிரபல பாடகருமான பிராங் சினுரா, பிரெஞ்சு ஜனதிபதி மிட்டரண்ட, டொனல்ட் றீகன் ஆகியவர்கள் பங்குபற்றும் கால் பந்துப் போட்டி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. அன்று மாலை 10 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில் றீகன் பொததான் ஒன்றை அமுக்கி இரண்டு வருட காலமாகச் செயலற்றிருந்த சுதந்திரச் சிலையில் இருந்து நியூயோாக் நகரம் முழுவதும் வெளிச்சமேற்றப்படும். அதே தருணத்தில் சகல இடங்களிலுள்ள மின் விளக்குகளும் ஒளியைப்பரப்பஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனதிபதி றீகன் அமெரிக்காவின சிரிப்பு மன்னனை பொப் ஹாப், உலகம் சுற்றிய ராஜதந்திரி ஹென்றி கிசிங்கர் ஆகியோர் அடங்கிய 12 பேர்களுக்குச் சுதந்திர விருது வழங்கிக் கௌரவிடபார்.

## யாழ்ரன் கல்லூரியில்

## கண்காட்சி

காரைநகர், வியாழன் காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றிணைந்த பாடத் திட்டத்திற்கான பொருட்காட்சியை வட்டார கல்வியதிகாரி திரு ப. சண்முகராசா இன்று வெள்ளிக்கிழமை காலை திறந்து வைப்பார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**கலாராணி- நடராஜா**

(வேம்படி மகளிர் கல்லூரி)

மலர்வு: 27-04-1968

உதிர்வு: 04-06-1986

மொட்டான
இவ் வயதில்
முடித்தே நீர்
இவ் வாழ்வை
எட்டாத அவ்வுலகு
ஏகியதும் ஏன் கலா
சிட்டான உம் நினைவும்
சிறகடித்தே எம்
நெஞ்சில்
கட்டாக கனிகிறதே
கவலையதும்
நெஞ்சகலா!

உங்கள் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
பெற்றோர்,
சகோதரர்கள் உற்றோர்,
உறவினர், நண்பர்கள்.

92, பருத்தித்துறைவீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(C 3275)

## 31-வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**செல்லையா கௌதம ராஜா**

(வீரா ரான்ஸ்போட் கொம்பனி ஊழியர்)

தோற்றம்: 30-08-1954

மறைவு: 04-06-1986

திதி: 04-07-1986

வடமாகாண மக்களின் உணவு முத்திரைகளுடன் வந்து கிளிநொச்சியில் அரக்கர்களிடம் இருந்து கூடவந்தவர்களை பாதுகாத்து தன்னுயிரை நீத்த எங்கள் கொம்பனி ஊழியர் செ. கௌதம ராஜாவை அன்புடன் நினைவு கூருகின்றோம.

எம் வாழ்வை உயரவைக்க அயராது உழைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக எங்கள் உயிர் உள்ளவரை ஆண்டவனைப் பிரார்த்தி கின்றோம்.

4-7-86 வெள்ளிக்கிழமை (இன்று) காங்கேசன் துறையில நடைபெறும் அந்தியேட்டியிலும் அதன்பின் துறைமுக நுழைவாயிலில் வீற்றிருக்கும் அரிஹர புத்திர ஐயனர் கோவிலில் நடைபெறும் அன்னதான வைபவத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றோர், உறவினர். நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரா ரான்ஸ்போட்
நிறுவனத்தின்
ஊழியர்கள்.

ஸ்ரீ ஐயனர் ஸ்ரோர்ஸ்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு.

C 3267

லிடோ

காலை 10-30, 2-30, 6-30
M.G.R -லதா நம்பியார்-
தேங்காய் நடித்த
**நீதிக்குத் தலை வணங்கு**
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன்

10-30, 2-30, 6-30
சிவாஜி- உஷாநந்தினி
சாரதா-மனோகர் நடித்த
**என்னைப் போல் ஒருவன்**
[கலர்]

## சேவைநலம் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். இந்துமகளிர் கல்லூரி அதிபர் செல்வி . இராமநாதன் 36 வருட சேவைக்குபின் ஓய்வு பெறுவதையிட்டு, கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை சேவைநலம் பாராட்டு விழா நடைபெற்றது.

ஆசிரியர்கள், மாணவிகள் பங்குபற்றிய இவ்விழாவில், ''யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும், அதிபராகவும் பணிபாற்றி கல்லூரி வளர்ச்சியில் பெரும் அக்கறை எடுத்தார்'' என்று ஆசிரியர்கள் பாராட்டுரை வழங்கியபோது குறிப்பிட்டார்கள்.

திருமதி அ. பாலகுமாரினல் வாழ்த்துப்பா பாடி வழங்கப்பட்டது.

## பூண்டுலோயா---

செய்தார்கள். இதனை தொடர்ந்து உடனடியாக 12 பேரும் விடுவிககப்பட்டனர்.

இரு சமூகத்தவருக்கு மிடையே ஏறபட்ட மோதல் நேற்று மேலும் தீவிரமடைந்தது.

சிங்களவர் இதனையடுத்து குடியேற்றத் திட்டத்திலிருந்த குண்டர் கோஷ்டியொன்று பூண்டுலோயாவிலுள்ளதமிழர்களுக்குச்சொந்தமான 15கடைகளை தீக்கிரையாக்கினர். அதே சமயம் சிங்களவருக்குச்சொந்தமான 13 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன, குடியேற்றத் திட்டத்திலுள்ள சிங்களவரினை 35 வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

பாரிய வீதித்தடைகள் போடப்பட்ட பின்னரே இத் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றன.

ஹற்றன், தலவாக்கொல்லை கொட்டகலை தோட்டங்களுக்கு ஊடாகச் செல்லும் தண்டவாளங்கள் அகற்றப்பட்டுள்ளதால் கொழும்பிலிருந்துவந்த ரயில் நவலப்பிட்டியுடனும், பதுளையிலிருந்து வந்த ரயில் நானுஓயாவுடனும் ரயில்சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் போக்குவரத்துச் சேவையிலீடுபட்டிருந்த பஸ்களும், தனியார் வாகனங்களும் கல்வீச்சுக்கு இலக்காகின.

மேற்குறிப்பிட்ட தோட்டப் பகுதிகளில் நேற்று முழுநாளும் பதற்றநிலை சூழ்ந்திருந்தது. வீதிகளில் வாகனங்களினதோ பொதுமக்களினதோ நடமாட்டம் இருக்கவில்லை. [மா]

## வடக்கு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா மேற்படி உறுதிமொழியை வழங்கினுர்:

''தமிழர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும் அதேவேளையில், சிங்களமக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான பாதுகாப்புஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்'' என சங் ஆனந்தகேரோ அமைச்சரிடம் வலியுறுத்தினர்.

பிரதான ஆட்சியதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசு வசமே இருக்கவேண்டும் என்றும், நாட்டினதும் மக்களினதும் எதிர்காலப் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் வலியுறுத்தினுர். (ஷ)

## அறிவித்தல்

யாழ். சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் வட இலங்கை சுதேச வைத்திய சபையில் இருந்து கடந்த ஏப்ரல் 16-ம் திகதி 1986இல் இருந்து எனது சபை உறுப்பினர் பதவியை இராஜினமா செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன்.

இப்படிக்கு
வைத்தியர் வ. சிவாஜி
03-7-86.

(C-3274)

சுன்னுகம்

ஸ்ரீகதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சித்திரத் தேர்த்திருப்பணி வேலைக்கான

## கேள்விப் பத்திரம்

அனுபவம் வாய்ந்த சிற்பாச்சாரியர்கள் மேற்படி தேர் ததிருப்பணி வேலைக்கான செய்கூலிக் கேள்விப் பத்திரங்கள் 18-07-86ஆம் திகதிக்கு முன்னர் ஷெ தேவஸ்தானச் சித்திரத் தேர்த் திருப்பணிச்சபை தலைவரின் முகவரிக்கு தபாலில் அனுப்பபபடவேண்டும்.

**தேரின் விபரம்:**

முகபத்திர வேலைப்பாட்டுடன் நாகர வடிவம் கொண்டதும் மூன்று வரிச்சிற்பங்களும் ஐந்து குதிரைகளும் சாரதியும் உட்பட 32 அடி 11 அங்குலம் உயரமும் அழகிய பந்தல் வேலைப்பாடுகளும் கொண்டதாக அமையவேண்டும்.

**நிபந்தனைகள் :**

1. வேலையைக் கட்டங்களாகப் பிரித்துச் செய்கூலிக்கான கேள்விகள் புதிய சித்திரத் தேரின் வரைபடத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. திருப்பணிச் சபையால் கொடுக்கப்படவேண்டிய மூலப்பொருட்கள் (மரங்களின் இனமும் அளவுகளும், இரும்பு, ஆணி வர்ணம் ஆகியவை) பற்றி விரிவான தொகைவிபரம் தரப்படவேண்டும்.
3. தமது கைப்படச் செய்த சித்திரத்தேர்கள் எந்தெந்தக் கோயில்களில் உள்ளன என்னும் விபரங்களுடன் இரு நற்சாட்சிப் பத்திரங்களையும் இணைத்து அனுப்பவும்.
4. கேள்விப்பத்திரத் தெரிவில் நிருவாக சபையின் முடிவே இறுதியானது.

திரு. தி. மாணிக்கவாசகர்,
தலைவர்.

சித்திரத்தேர் திருப்பணிச்சபை,
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னுகம்.

[C 3259]

## மட்டக்களப்பு -

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாதிக்கப்பட்ட இரண்டாயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கத் தான் முயற்சிசெய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கச்சேரியில் நேற்று நடைபெற்றபத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் நிருபர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே திரு. அந்தோனிமுத்து மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

## இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது இக் கூட்டத்தின் போதே மேற்படி விடயம் குறித்து இந்திய மத்திய அரசுடன் கலந்தாலோசிப்பது என்றும் அடுத்தவாரம் புதுடில்லி செல்வதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

இன்றைய கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு. சிவசிதம்பரம் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திரு வெ. யோகேஸ்வரன் திரு ஆர் சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இலங்கை அரசு முனவைத்துள்ள ஆலோசனைகளில் சில முக்கிய முரண்பாடுகள் இருப்பதாக இக் கூட்டத்தின்போது கருத்து வெளியிடப்பபட்டது. [பி]

## அறிவித்தல்

1986ம் ஆண்டு யூலை மாதம் பின்வரும் நாட்களில் அவசர திருத்த நிர்மாண வேலைகளுக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் மின் விநியோகம் தடைப்படும் என்பதை அறியததருகின்றேன்.

| தேதி | காலம் | நேரம் காலை | — | மாலை |
|---|---|---|---|---|
| 5-7-1986 | சனிக்கிழமை | 7-30 | — | 5 00 மணி வரைக்கும் |
| 6-7-1986 | ஞாயிற்றுககிழமை | 7-30 | — | 5-00 ,, ,, |
| 12-7-1986 | சனிக்கிழமை | 7-30 | — | 5-00 ,, ,, |
| 13-7-1986 | ஞாயிற்றுக்கிழமை | 7-30 | — | 5-00 ,, ,, |

இதனுல் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகிறேன்,

**மின் பொறியியலாளர்**
கிளிநொச்சி பிரதேசம்
மாங்குளம்.

(A 890)

# மண்டைதீவு வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டது

பண்டத்தரிப்பு, வியா.

மண்டைதீவுப் பகுதியில் ஏற்பட்ட பதற்றநிலை காரணமாகவும், அச்சம் காரணமாகவும் மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை ஊழியர்கள் கடமைக்குச் செல்லாததினால் வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றிய வைத்திய அதிகாரியும், மற்றும் ஊழியர்களும் பாதுகாப்பின்மையால் தாம் கடமைக்கு செல்லமுடியாது இருப்பதாக யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு முறையிட்டுள்ளனர்.

இவர்களை தற்போது குருநகர் அரசினர் வைத்தியசாலையில் தற்காலிகமாக கடமையாற்றுவதற்கு யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

# 'புளட்' போராளி மறைவுக்கு அஞ்சலி

பண்டத்தரிப்பு வியா.

கோப்பாய் - கைதடி பாலத்தடியில் கடந்த திங்கட்கிழமை ஜீப்பில் சென்று கொண்டிருந்த வேளையில் ஹெலிகொப்டரிலிருந்து ஆயுதப்படையினர் குண்டுத்தாக்குதல் நடாத்தியபோது மரணமடைந்த 'புளட்'' இயக்கத்தை சேர்ந்த போராளி பிரதீபன் பார்த்திபனின் இறுதிச் சடங்குகள் பண்டத்தரிப்பில்நேற்றுநடைபெற்றது அப்போது சகல இயக்கங்களையும் சேர்ந்த பெருந்தொகையான போராளிகளும் பொதுமக்களும் திரண்டு வந்து தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்கள்.

அவரது சடலம் அலங்கரிக்கப்பட்ட வாகனம் ஒன்றில் வைக்கப்பட்டு ஊர்வலமாக பண்டத்தரிப்பு மத்திய சந்தை வரை கொண்டு வரப்பட்டு பண்டத்தரிப்பு சந்தியில் சிறிது நேரம் தரித்து வைக்கப்பட்டிருந்தது. ஒலிபெருக்கி பூட்டிய வாகனம் ஒன்றிலிருந்து அஞ்சலிக் கீதங்கள் பாடப்பட்டன. இந்த இறுதி ஊர்வலத்தில் அடிக்கடி குண்டுகள் வெடிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

வீதிகள் சந்திகள் தோறும் வாழை, தென்னை, பனை ஆகியவற்றினால் அலங்கரிக்கப்பட்டு கறுத்தக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. இயக்கங்களின் சார்பில் மலர் வளையங்களும் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தடபட்டது.

# இரத்த தானம்

சாவகச்சேரி வியா

சாவகச்சேரி லியோ கழகத்தினர் இம்மாதம் 9ம்திகதி புதன்கிழமை சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்ச்சியொன்றினை நடத்தவுள்ளனர்.

இரத்ததானம் செய்யவிரும்புவோர் சாவகச்சேரி லியோ கழகத்தினருடன் தொடர்பு கொள்ளலாம்.

## ஷெல் தாக்குதல் நால்வர் பலி 9 பேர் காயம்!

புலோலி, வியா.

பருத்தித்துறையில் நடைபெற்ற மோட்டோர் ஷெல் தாக்குதல்களில் இரு இளைஞர்களும், வயோதிபர் ஒருவரும், சிறுமி ஒருத்தியும் பலியாகினர். ஒன்பது பேர் காயமடைந்தனர். பலியானவர்கள் விபரம் வருமாறு: எஸ் ரகு [வயது20], தம்பசெட்டி, எம். ராம் [வயது 22], வண்ணுந்துறை, ரீ. சிவக்கொழுந்து [வயது 50], சாளம்பை,செல்வி எஸ். பேரம்பலம் [வயது 12], சாளம்பை.

காயமடைந்தமடைந்தவர்கள் விபரம்: பே. பாமினிதேவி [வயது 12], பே. சுஜாதா [வயது 8], க. சிவபாக்கியம் [வயது 45], கே. ராஜமலர் [வயது 25], பி. அபிராமசுந்தரி [வயது 40], பி. செல்வராணி [வயது22], இ ரமணன் [வயது 6], மு. விஜயகலா [வயது 18], உஷா நந்தினி [வயது 6].


# பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ சவூதி அரேபியா

அ. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடா வரை அழைத்துச்செல்வார். செல்ல விரும்புவோர் யூலை 15-ம் திகதிக்குப் பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

ஆ. டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

இ. சவூதி அரேபியாவுக்கு (Labour)தொழிலாளர்கள் உடன் தேவை. செல்ல விரும்புவோர்15-ம்திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போட்டுடன் 6 படங்களும் கொண்டுவந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து வெற்றிடங்களுக்கு முன்னுரிமை பெற்றுக்கொள்ளவும்.

ஈ. கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான பிரயாண சேவை (Colombo) கொழும்பிலிருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாவற்றுக்கும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**N. BALA,**

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குறிப்பு: (பஸ் வழி இல. 764 பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை.)

(C 3250)



# பிரயாண ஒழுங்குகள்

## டென்மார்க், கனடா



(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

ஜூலை 7ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.

எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத்
★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்

பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)

(A 757)



# பவர்ஸ் வீட்டுத் தோட்ட உர வகைகள்




MASTERS ABC 2/83

தேவையான விசேட உரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல, 3. பழ மரங்கள்
இல. 4. கிச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னாசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்றரை
இல. 12. றோசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – ''விசேடம்''
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

(A-471)



# வாடிக்கையாளர்கள் பாவனையாளர்களுக்கு தோலகட்டி தயாரிப்பாளர்களின் ஓர் முக்கிய அறிவித்தல்

தற்போது உள்ள கால சூழ்நிலையிலும் மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாகவும் எமது நெல்லிரசத்தின் விலையை அதாவது மொத்தவிலையை உயர்த்தி உள்ளோம். வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் இவ்விலை உயர்வை தற்கால சூழ்நிலையில் பெரிதாக எண்ணமாட்டீர்கள் எனவும் எமக்கு நல்லாதரவு தருவீர்கள் எனவும் தாழ்மையுடன் எண்ணுகின்றோம்.

நன்றி.

போலிகள் கவனம்!!

நெல்லிரசம் மொத்த விலை ரூபா 22/–
ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 24–50

இது ஓர் உள்ளூர் உற்பத்தி என்பதை மறவாதீர்கள்.

ஏகப் பிரதிநிதிகள்:

ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்,
யாழ்நகர்.

செபமாலை தாசர்சபை
தோலகட்டி,
வயாவிளான்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

**வரணி மிசன் விற்பனை நிலையம்**

145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[A 762]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**வி. சதாசிவம்**
(இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்)

தாயின் மடியில்:
04- 02- 1922

இறைவன் அடியில்:
05- 06- 1986

எங்கள் குடும்பத்தின் தலைவனாய், வழிகாட்டியாய், ஒளிவிளக்காய் அன்புடன் வாழ்ந்து திடீரென எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மறைந்த தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரிகைகள் 05-07-1986 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கிறோம்.

ஆன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

வதிரி,
கரவெட்டி.

(C 3249)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**சதாசிவம் தம்பிரத்தினம்**
(Retd, Railway Costing Officer)

முதல் மகனாய்ப் பிறந்து, கல்வி, கடமை, கண்ணியம். கட்டுப்பாட்டிலும் முதல்வனாகத் திகழ்ந்த எம் ஆருயிர்ச் சகோதரனே! ஒன்பது சகோதரருடன் பிறந்தும், மூன்று சற்புத்திரர்களைப் பெற்றும் ஈற்றில் அநாதை போல் ஆண்டவன் சந்நிதியில் அமைதி பெறச் சென்றாயோ! எங்கள் குடும்ப குல விளக்கின் முதல்திரி ஏற்றி ஏனைய திரிகளையும் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்த அன்பின் சிகரமாகிய உடன்பிறப்பை. குடும்பத் தலைவனை, தந்தையை எப்பிறப்பில் காண் காண்போம் இனி.

அண்ணலே! உன் ஆத்மா சாந்தியடைய சந்தவனப்பதி வாழ் ஆறுமுகக் கடவுளை என்றென்றும் வேண்டுகிறோம்.

அன்பின் அக்கா,
தம்பிமார்,
தங்கைமார்,
மைத்துனர்கள்,
புத்திரர்கள்.
(C 3237)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை**
(B.Sc. மாஸ்ரர்)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து எம்மை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் மரண வைபவத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

5-7-86 சனிக்கிழமை பகல் 11 மணியளவில் அளவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வெள்ளியம்பதி,
அளவெட்டி.

[C-3198]

## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 20 [4 - 7 - 86]
நக்ஷத்திரம்: ரோகினி
திது: திரயோதசி

மேடம்: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும். கடமைகள் சீர்குலையும் வீண் நஷ்டத்துக்குமிடமுண்டு சிந்தனைகளுக்கு இடமளிக்காதிருக்கவும்.

இடபம்: ஏமாற்றமான செய்திகிடைக்கும். கல்வியில் மந்தநிலை காணும். தனியார் துறையில் கடமைபுரிவோர் அவதானம் வேண்டும்.

மிதுனம்: குடும்ப வாழ்க்கை இனிமை நிறைந்ததாக இருக்கும் மேலதிகாரிகளின் ஆதரவும் கிட்டும். காதலர்களுக்கு கனகுஷியான தினம்.

கடகம்: பணமுடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள். மனப்போராட்டங்களும் அதிரிக்கும். வழக்கு விவகாரங்களுக்கு இடமளிக்காதிருக்கவும்.

சிங்கம்: இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர் சுபகாரியம் ஒன்றும் இடம்பெற லாம் கல்வி முன்னேற்றமுமுண்டு.

கன்னி: வாழ்க்கையில் வசதிகள் பெருகும். பொதுப்பணிகளில் நாட்டம் தொழிற்சிறப்பு இவற்றுடன் பெரியோர் ஆதரவும் தாராளம் கிட்டும்.

துலாம்: அன்னியர் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும் எதிரிகளின் சூழ்ச்சி மனநிர்மதியைக் குறைக்கும். அக்கினி ஆயுத பிணிக்குமிடமுண்டு அவதானம்.

விருச்சிகம்: அறவழியில் நாட்டம் பிறக்கும். குடும்பத்திலும் சுமுகமானநிலை தென்படும். எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்றுக்கும் வழிகோலப்படும்.

தனுசு: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். வீண்பழிக்கும் இலக்காகுவீர்கள். முகமன்பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையாக இருக்கவும்.

மகரம்: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதா வழி ஆதரவுதாராளமாகக் கிடைக்கும். வித்தையிலும் வெற்றிக்கிடமுண்டு.

கும்பம்: ஆராய்ச்சியாளர் பெருமையடைவர். தாராள சிந்தைமேலிடும், பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். தொழில்முயற்சியுமுண்டு.

மீனம்: வெற்றி உமது அருகில் விரைந்து வரும். எதிர்பாராத வரவுகளுக்கும் இடமேற்படலாம். நினைத்தகாரியம் சித்திக்குமிடமுண்டு முன்னேற்றமான தினம்.

திருமலை ரவீந்திரன்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கமலாவதி கந்தையா**

தோற்றம்: 10-05-1906

மறைவு: 04-06-1986

தாயாய்ச் சகோதரியாய்
தண்ணளிசேர்பாட்டியு-
மாய்
ஓயாக் கருணை
ஒளிமழையாய்
உறவினர்க்குத்
தூய ஒளி சுடர்ந்தாய்
சொர்க்கத்தின்
விளக்காகிப்
போய் குளிர்நிலவுன்
பொன்னடிக்கெம்
அஞ்சலிகள்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

சிவகாமி அம்மன்
கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

[C-3240]


# வாங்கலாம் விற்கலாம்

**வாரீர்! வாரீர்!!**

★ காணிகள் ★ வீடுகள் ★ தளபாடங்கள்
★ மோட்டார் வாகனங்கள் ★ மின் உபகரணங்கள்
★ இயந்திரங்கள்

அமோக வரவேற்பைப் பெற்று முன்னர் இயங்கிவந்த இச்சேவை, பலரதும் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

Dyn. Ads

வெளிநாடு செல்வோருக்கு ஒரு தலையிடி தீர்ந்தது உங்கள் பெறுமதிவாய்ந்த பொருட்களுக்கும் சொத்துக்களுக்கும் நியாயமான விலைகளைப் பெற எம்முடன் தொடர்புகொளக.

தரமான பொருட்களைச் சாதகமான விலைகளில் எங்கே வாங்குவது என்ற கேள்விக்கு விடைகாணத் துடிப்போர் இங்கே வருக.

## ரெலிபோன் - ரெலெக்ஸ் வெளிநாட்டுப் பிரயாணம்

ஆகிய துறைகளில் முதல்தரமான சேவையைத் தந்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற நிர்வாகத்தினரின் மற்றொரு சேவை இது.

## Mack Auctioneers & Brokers,

இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Telephone: 24791, 24836.
(A 766)


## யாழ். மாவட்ட கிறிஸ்தவக் கலை கலாச்சார உபகுழு நடாத்தும் "நாட்டார் பாடல் போட்டி"

நற்செய்தியை ஆதாரமாகக் கொண்டு பின் வரும் தலைப்புகளில் பாடல்கள் அமையவேண்டும்.

[1] மேழிச் செல்வம் [அரிவி வெட்டும் பின்னணியில்]
மத்தேயு, அதிகாரம் 13 வசனம் 4-24
[2] நீலக்கடலில் [மீன்பாடு பின்னணியில்]
மத்தேயு அதிகாரம் 14 வசனம் 22-33
[3] இழவில் அழுதிடும் பெண்கூட [ஒப்பாரிப் பின்னணியில்]
அருளப்பர் அதிகாரம் 11. வசனம் 1-44

ஒவ்வொரு தலைப்புக்கும் 3 பரிசில்கள் வழங்கப்படும். ஒருவர் எத்தனை பிரதிகளையும் அனுப்பலாம். தெரிவுசெய்யப்படும் ஆக்கங்கள் வெவ்வேறு பங்குகளில் உள்ள நாடக, நடனக் குழுக்களினால் மேடையேற்றப்படும்.

**நிபந்தனை:**
பாடல் 20 நிமிட நேரம் பாடக்கூடிய அளவில் எழுதப்பட்டு, யூலை 30ம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக வண. பிதா பிரான்சிஸ் யோசெப், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் வண. பிதாவுடன் தொடர்பு கொள்க.

வை மு. பஞ்சலிங்கம்,
யாழ். மாவட்ட செயலாளரும்,
அரச அதிபரும்.

[A-698]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 4-7-86

# "எம். ஜி. ஆர். உதவியை தமிழீழ மக்கள் மறக்கவேமாட்டார்கள்"

## சிறுமியின் சடலம்

வவனியா, வியாழன்

வவனியா மூன்றுமுறிப்பு பிள்ளையார் கோவிலடியில் நேற்று சிறுமியின் சடலம் ஒன்று கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (மா)

## கார் கடத்தல்

அராலி, வியாழன்

அராலி இந்துக்கல்லூரி உப அதிபரின் கார் அவரது வலந்தலையிலுள்ள வீட்டில்வைத்து துப்பாக்கிமுனையில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளது.

## ராணுவ முகாமுக்கு நெடுந்தீவு குதிரை


நெடுந்தீவு வியாழன்

நயினாதீவு ராணுவமுகாமிற்கு நெடுந்தீவுக் குதிரையொன்றுநேற்றுவழங்கப்பட்டது.

பிரயாணிகள் படகின் பிரதான ஓட்டுநர்முகாம் அதிகாரிகளால் பல தடவைகள் இராணுவ முகாமிற்கு குதிரை ஒன்று கொண்டு வந்து தரும்படி நிர்ப்பந்திக்கப் பட்டதாகவும் குதிரை ஒப்படைப்பதில் காலதாமதம் செய்துவரவே குறித்த காலத்திற்குள் குதிரைகொண்டு வரத் தவறின் பிரயாணிகள் படகு சேவையில் ஈடுபடுவது தடை செய்யப்படும் என்றும் அதிகாரிகளால் தெரிவிக்கப் பட்டதாம்.

இந்த ஏற்பாட்டால் பொதிகள் ஏற்றுவதே தடை செய்யப்பட்டிருந்த பிரயாணிகளுக்கான 'குமுதினி' படகில் குதிரை ஒன்று நேற்று ஏற்றப்பட்டு முகாமில் ஒப்படைக்கப்பட்டது.

## விடுதலைப் புலிகள் அறிக்கை



[சென்னை]

"இலங்கைத் தமிழர்களின் துயரைத் துடைக்க அயராது பாடுபடுபவர் முதல்வர் எம். ஜி. ஆர். அரசியல் லாபம் கருதாது விளம்பரமின்றி அவர் செய்யும் உதவிகளை இலங்கைத் தமிழ் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்" என்று விடுதலைப் புலிகள் இயக்கம் சென்னையில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

தமிழீழ சுதந்திரப்போராட்டம் மிகவும் சோதனையான காலகட்டத்தை எதிர்நோக்கியிருக்கும் இச்சூழ்நிலையில் தமிழக மக்கள் கட்சிவேறுபாடற்ற முறையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கவேண்டும்

"ஈழத் தமிழ் மக்கள் இன்று மிகவும் இக்கட்டான, நெருக்கடியான காலகட்டத்தை எதிர்நோக்கி நிற்கிறார்கள். சிங்கள அரசு தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க முனைந்து வருகின்றது. சிங்கள ஆயுதப் படைகள் தமிழர்களை ஒழித்துக்கட்டப் போர்க் கோலம் பூண்டு நிற்கின்றது. உலக ஏகாதிபத்திய நாசகார சக்திகளும் சிங்கள அரசின் இனக்கொலைத் திட்டத்திற்கு முண்டு கொடுத்து உதவுகின்றன.

"தமிழ்நாட்டுமுதலமைச்சர் எம் ஜி ஆருக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் மத்தியில் உள்ள நெருக்கமான உறவு பற்றியும் நாம் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. தமிழீழமக்களின் பாதுகாப்பிற்கும் தமிழீழ சுதந்திரப் போராட்டத்திற்கும் முதலமைச்சர் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை அவர்வகிக்கும் முக்கிய பொறுப்புக் காரணமாகவும், அரசியல்- ராஜதந்திர சூழ்நிலைகள் காரணமாகவும் முதலமைச்சர் புரிந்தஉதவிகள் பகிரங்கப்படுத்த முடியாதவையாக இருக்கின்றன. ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகின்றோம் எம் ஜி ஆர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகவும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டவர். தமிழீழ மக்களின் துயரைத் துடைக்க அயராது பாடுபடுபவர். அரசியல் லாபம் கருதாது விளம்பரம் இன்றி அவர் செய்யும் உதவிகளை தமிழீழ மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்."

"தமிழீழ சுதந்திரப் போராட்டம் மிகவும்சோதனையான காலகட்டத்தை எதிர்நோக்கியிருக்கும் இச்சூழ்நிலையில் தமிழ்நாட்டு மக்கள் கட்சிவேறுபாடற்ற முறையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பது மிகவும் அத்தியாவசியமானதாகும். நாமே எமது மக்களின் பாதுகாவலர்கள் என்ற வகையிலும் எமது மக்களின் விடுதலை வீரர்கள் என்ற வகையிலும் எமது போராட்டத்தில் அக்கறையுள்ள இன



உணர்வு கொண்ட சகலரும் எமக்குத் தொடர்ந்து ஆதரவு அளிப்பார்கள் என நம்புகின்றோம்"

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சிவபூதவராயசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

## ஞாயிறு திறப்புவிழா வைத்தீஸ்வராவில் அம்பிகைபாகன் அரங்கு

யாழ்ப்பாணம்,வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் ஆண்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியையே தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுழைத்த முன்னாள் அதிபர் திரு. எஸ் அம்பிகைபாகன் நினைவாக 'அம்பிகைபாகன் அரங்கு' ஒன்றும் இவ்விழாவில் அன்று நண்பகல் 12 மணிக்கு திறந்துவைக்கப்படவிருக்கிறது.

வித்தியாலயகின் பழைய மாணவர் சங்கத்தினரால் இவ்வரங்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதுகுறிப்பிடத்தக்கது. [மா]

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் கடந்த 1985ம் ஆண்டுடிசம்பர் மாதம் நடாத்தியதேர்வுகளிற் சித்தியடைந்தோர் விபரம் பின்வருமாறு:

பண்டிதர் தேர்வு ஒருவரும் சித்தியடையவில்லை

பிரவேச பண்டிதர் தேர்வில் இரண்டாம் பிரிவில் வா. சடாட்சரம் சித்தியடைந்துள்ளார்.

மூன்றாம் பிரிவில் ஜெயந்தி சுப்பிரமணியம், ஸ்ரீமாலா சின்னத்தம்பி, சூரியகுமாரி கதிரவேலு, செ சிவலிங்கராசா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

அடுத்த தேர்வுப் பரீட்சை 1987ம் ஆண்டு ஜனவரியில் நடாத்தப்படுமென மேற்படி சபையின் கௌரவ செயலாளரும், பிரதம கல்வியதிகாரியுமான திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார், [ஐ]

## கிளிநொச்சி அகதிகள் கைதடியில் தஞ்சம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து அகதிகளாக வந்த பல குடும்பங்கள் கைதடி வெளிக்கள நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அகதிகளாக வந்த இம்மக்களுக்கு உணவு, உடை போன்ற அத்தியாவசிய உதவிகள் தேவைப்படுகின்றனவெனத் தெரிவிக்கப்படுகிறது. பொதுஸ்தாபனங்கள், பொது மக்கள் இவர்களுக்கு உதவும்படி கேட்கப்படுகின்றனர். [ஐ]

## முதலுதவி சுவரொட்டி

வேலணை வியாழன்

அநாவசிய உயிர் இழப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்கு முதலுவிச் சிகிச்சை பற்றி சகலரும் தெரிந்து கொள்ளுங்கள் எனத் தெரிவிக்கும் சுவரொட்டிகளை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மருத்துவக்குழுவினர் வெளியிட்டுளளனர்.

செஞ்சிலுவைச் சின்ன அடையாளமிடப்பட்ட இப்பிரசுரங்கள் குடாநாட்டில பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

## கொள்ளைக்கு மரண தண்டனை

மட்டக்களப்பு வியாழன்

கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் நேற்று மின் கம்பத்துடன் சட்டப்பட்டு துப்பாக்கியால் கட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு மண் முனைத் துறையைச் சேர்ந்த குஞ்சன் தர்மன் (23 வயது) என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

இவரது சடலத்துக்கு அருகாமையில் போடப்பட்டிருந்த துண்டுப்பிரதியில் "கொள்ளைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட இவருக்கு மரண தண்டனை ஈ பி ஆர்.எல்.எவ் என்று எழுதப்பட்டிருந்தது. (மா)

## மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடிப் பகுதியில் ஹெலிகொப்டர் அடிக்கடி தாழப் பறந்து செல்வதினால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இதனால் வயல்களில், தோட்டங்களில் வேலைசெய்கின்ற மக்கள் மிகவும் அச்சத்துடன் வேலைசெய்கின்றனர். [ஐ]

## வடபகுதி வாகனங்கள்---
## வவனியா தடைமுகாமில் சோதிக்கப்படும்

வவனியா வியாழன்

வடபகுதியிலிருந்து கொழும்புவரும் சகல தனியார் வாகனங்களும் வவனியா தடைமுகாமில் வைத்துப் பலத்த சோதனையிடப்படும் என்றுநேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மகாநாட்டில் பொலிஸ் அதிபர் இத்தகவலைத் தெரிவித்தார்.

வாகனங்களில் ஏற்றிச் செல்லும் சகல பொருள்களும் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு நன்கு பரிசீலனை செய்த பின்னரே அனுப்பிவைக்கப்படும் என்று இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## இறைவரித் திணைக்களம் இடமாற்றம்

யாழ்ப்பாணம் வெள்ளி

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்ப்பாணக் கிளை வரியிறுப்பாளர்களின் வசதி கருதி ஸ்ரீதர் தியேட்டருக்கு எதிரே உள்ள கட்டிடத்தில் தற்காலிகமாக இப்பொழுது இயங்கி வருகின்றது.

## கிளிநொச்சியில் மூடப்பட்ட பாடசாலைகள் 7ல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஏழு பாடசாலைகள் மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை 7-ம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி கனிஷ்ட மத்திய வித்தியாலயம், கனகபுரம் மகா வித்தியாலயம், சென் திரேசா மகா வித்தியாலயம், புனித பற்றிமா பாடசாலை. இந்து மகா வித்யாலயம், சிங்கள மகா வித்தியாலயம் ஆகிய ஏழு பாடசாலைகளுமே மேற்படி 7-ம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுளள பாடசாலைகளாகும்.

அன்றைய தினம் மாணவர்கள் ஆசிரியர்கள் தவறாது சமூகமளிக்க வேண்டும் என்றும் க பொ. த. [சாதாரணம்] பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் அன்றைய தினம் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யலாம் என்றும் பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளார்கள். (வி)

## முன்னோடிப் பரீட்சை: அதிபர்களின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள க. பொ. த. உயர்தர வகுப்புக்களையுடைய பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலை உயர்தர மாணவர்களுக்குமுன்னோடிப்பரீட்சையை நடாத்த விரும்பினால் பளை மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக அமைந்துள்ள கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி கல்விப பணிப்பாளர் எம்.எம். மன்சூர் ஓர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா மாரிமுத்து
### புங்குடுதீவு, 12

திருமதி கந்தையா மாரிமுத்து முரசுமோட்டையில் காலமாகி விட்டார். இவர் காலம்சென்ற ஆ. வே. கந்தையாவின் அருமை மனைவியும், நாகராசா, பாலசிங்கம், பரஞ்சோதி அதிபர் திருவையாறு தமிழ் வித்தியாலயம், ஆனந்தமூர்த்தி மிருக வைத்தியர் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும் தனலெட்சுமி, உலகநாயகி, மங்கலாம்பாள் (ஆசிரியை முரசுமோட்டை மகா வித்தியாலயம்) ஞானகிதேவி (கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-7-86 (இன்று) வெள்ளிக்கிழமை முரசுமோட்டை பொது மயானத்தில் 3 மணியளவில் நடைபெறும்.

க. பரஞ்சோதி,
10/3 முரசுமோட்டை, பரந்தன். (C 3277)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.